## விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 2010

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வுகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்களுக்கும் விளக்கங்களுக்கமைய, விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்தது. இவ்வறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகத்தின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும், காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தக்கிரயம் ரூபா 30,014,191ஆன 06 வகையான நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்ட மதிப்பு பூச்சியமாக காணப்பட்டிருந்த போதிலும், அந்நிலையான சொத்துக்கள் தொடர்ச்சியாக பயன்பாட்டுக்குட்பட்டு வருவதால் இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதியை கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக 2011 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட ரூபா 612,277 பெறுமதியான 06 செலவின விடயங்கள் அட்டுறு அடிப்படையின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையால் அப்பெறுமானத்திலான மீளாய்வாண்டின் செலவினம் மற்றும் செலவினக் கடன்கொடுத்தோர் என்பன குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்காக 2011 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட ரூபா 42,050 தொகையிலான இரண்டு செலவினத்திற்காக குறித்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அப்பெறுமானத்தால் அட்டுறு செலவினக் கணக்கும் மூலதன நிதியக் கணக்கின் பெறுமதியும் முறையே குறைத்தும் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.2.3 இணக்கமின்மை

-------------------------

12 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 26,926,186 ஆக இருந்ததுடன், அதற்குரிய கட்டுபாட்டுக் கணக்குளின் பிரகாரமான கூட்டுத்தொகை ரூபா 26,887,458 ஆக இருந்தது.

1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------------------

(i) 02 முதல் 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 245,081 ஆன நிலுவை ஊழியர் கடன் மீதிகள் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2001 முதல் 2007 ஆம் ஆண்டு வரை ரூபா 640,117 தொகையான கணக்காய்வுக் கட்டணங்களில் ரூபா 9,685 தொகை மீய்வாண்டின் இறுதி வரை நிலுவையாகக் காணப்பட்டது.

1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அவற்றை திருப்திகரமான முறையில் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது மெய்மையாய்வு செய்யவோ முடியாதிருந்தது.

| விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நூலகப் புத்தகங்கள் | 9,724,162 | (i) பாவனை ஏடு<br>(ii)பௌதீக மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) நிலையான சொத்துக்கள்(கிரயம்) | 122,614,025 | (i)நிலையான சொத்துப் பதிவேடுகள்<br>(ii) பட்டோலைகள் |
| (இ) ஆராய்ச்சி மானியங்கள் | 12,731,536 | செயன்முன்னேற்ற அறிக்கை |
| (ஈ)வெளிநாட்டு பிரயாணம் - ஆராய்ச்சி | 711,901 | பிரயாணத்திற்கான தேவையான பரிந்துரைகளையும் அங்கீகாரங்க-ளையும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| (உ)நிலையான சொத்துக்கள் கைதவிர்ப்புக்கள் (விஞ்ஞான ஆய்வுகூட மற்றும் கற்றல் உபகரணங்கள்) | 1,444,856 | கைதவிர்ப்புச் செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் 54 உருப்படி களுக்குரிய கிரயப் பெறுமதி |

1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

---

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்புகள் | இணங்காமை |
| --- | --- |
| (அ) சட்டம் | |
| (i) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | 03 மாதங்களுக்கு முன்னர் பாதீட்டினைத் தயாரித்து கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் பாதீட்டிற்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நிறுவகத்திடமுள்ள மிகை நிதியை முதலீடு செய்யும் போது தொடர்புடைய அமைச்சரின் அனுமதியுடன் நிதி அமைச்சரின் இணக்கப் பாட்டையும் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், ஆண்டின் இறுதியில் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 118,307,817 கூட்டுத் தொகையான நிலையான வைப்பினை முதலீடு செய்தல் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க நிதிப்பிரமாணம் | |
| (i) நி.பி. 372(இ) | (i) துணைக்கட்டுநிதி பதவிநிலைத்தர உத்தியோ கத்தர்களுக்கு மட்டுமே வழங்க முடியுமான போதிலும் பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 11 சந்தர்ப்பங்களில் ரூபா 60,500 முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

(ii) நிறுவனம் வழங்கக்கூடிய முற்பணத்தை உரிய செயற்பாடு நிறைவடைந்த உடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 16 சந்தர்ப்பங்களில் ரூபா 515,692 தொகை 02 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரையான காலதாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தன.

(iii) 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 66,000 ஆன முற்பணத்தை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காமல் 21 நாட்கள் முதல் 07 மாத காலவீச்சில் கையில் வைத்துக் கொள்ளப்பட்டு பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

(ii) நி.பி. 135,136 மற்றும் 137

நிறுவகத்தின் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டிற்காக அதிகாரம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ix ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் உப பிரிவு

அரச ஊழியராக பெற்றுக்கொண்ட பயிற்சியை பயன்படுத்தி அலுவலக நேரத்திற்குப் புறம்பாக செய்யப்படுகின்ற அலுவலக வேலையல்லாத வேலைகளுக்காக கிடைக்கும் கட்டணங்களில் 10% திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் விரிவுரைகளில் ஈடுபட்ட 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 48,160 திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/ 2002/02 ஆம் இலக்கமுடைய திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 2002 நவம்பர் 28 ஆம் திகதிய திறைசேரிச் செயலாளரின் கடிதம்

கணனிகள் மற்றும் உபபாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| (உ)விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2010.09.18 ஆம் திகதிய கட்டுப்பாட்டுச் சபைத் தீர்மானம் | குறுங்கால செயலமர்வுகளுக்காக வளப்பகிர்வாளர் கொடுப்பனவினைச் செலுத்தும் போது நிறுவகம் வருகை விரிவுரையாளர்களுக்கு GIS பாடநெறிக்காக விரிவுரை மணித்தியாலம் ஒன்றிற்காக ரூபா 1,250 உம் செய்முறைப் பயிற்சிக்காக விரிவுரையாளர் ஒருவருக்கு ரூபா 750 காட்சியாளர்களுக்கு ரூபா 400 வீதமும் செலுத்த வேண்டிய போதிலும், அப்பெறுமானத்தை மிகைத்து ரூபா 26,250 கூட்டுத்தொகையான விரிவுரைக் கட்டணங்களும் ரூபா 145,475 கூட்டுத்தொகையான செய்முறைப் பயிற்சிக் கட்டணங்களுமாகச் செலுத்தப்பட்டிருந்தன. |

### 1.2.7 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1978 மார்ச் 10 ஆம் திகதிய பீஈ/1/174/11(ஆ) இலக்கமுடைய பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கு முரணாக 1997 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழித்தேர்ச்சிக்காக உரித்தற்ற உத்தியோகத்தர்களுக்கு ரூபா 212,230 தொகையான படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூலை 18 ஆம் திகதிய பீடி/ஜஎன்எஸ்/சீஎல்யூஎஸ்-ஏ/078 இலக்கமுடைய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கைக் கடிதத்திற்கு முரணாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கு பங்களிப்புத் தொகையை கணக்கிடும் போது கல்விசார் கொடுப்பனவையும் சேர்த்து கணிப்பிட்டிருந்தமையால் 1998 முதல் 2010 ஆம் ஆண்டு வரை முறையே ரூபா 419,550 தொகையும் ரூபா 83,910 தொகையும் கூடுதலான பங்களிப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 8.2 ஆம் பிரிவில் காணப்படும் மைல் கட்டண அளவைத் தாண்டி முகாமைத்துவ சபை தீர்மான இலக்கம் 74 இன் பிரகாரம் கிலோமீற்றர் ஒன்றுக்கு ரூபா 25 வீதம் கொடுப்பனவு செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டதனால் விரிவுரையாளர்களுக்கு 16 சந்தர்ப்பங்களில் ரூபா 80,062 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அனுமதிக்கப்பட்ட 84 மணித்தியாள அளவினை மிகைத்து சேவையில் ஈடுபட்டுள்ள ஐந்து உத்தியோகத்தர்களுக்கு 18 சந்தர்ப்பங்களில் ரூபா 59,974 மேலதிக நேர கொடுப்பனவுகள் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக போதியளவு நிதிஏற்பாடு இன்மையால் நிறுவன நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 21,052 மீள்நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.2.8 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்
---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) இலங்கை விவசாய கொள்கை சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளருக்கிடையே சோயா போஞ்சி பயிரிடலுக்காக 2005 சனவரி 12 ஆம் திகதி முதல் 03 ஆண்டுகளில் ஆராய்ச்சி ஒன்றினை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 4,646,980 மானியம் மற்றும் அதன் பெறுபேறுகள் அடிப்படையில் யூரியா பசளைக்காக பயன்படுத்தக்கூடிய அம்மாதிரி திணைக்களத்தினால் 2008 ஆம் ஆண்டிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப் பட்டிருந்ததுடன், அவ்வாறான உற்பத்தியை செய்வதற்கோ அல்லது வியாபார நடவடிக்கையை மேற்கொள்வதற்கோ நிறுவனத்தை உருவாக்குவதற்கான சட்டத்தினூடாக சட்டரீதியாக நிதிஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ரைசோபியம் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரை முறையான மேற்பார்வையொன்றோ நிர்வகிப்பொன்றோ இல்லாத அடிப்படையில் அக்காலப்பகுதிக்குரிய வருமானம் மற்றும் செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2008 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 3,883,350 உம் செலவினத் தொகையான ரூபா 4,054,035 உம் ஆராய்ச்சி மானியத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இச்செயற்பாடு வியாபார ரீதியான செயற்பாடொன்றாக இருப்பதனால் இச்செயற்பாட்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் வேறாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2010 சனவரி 19 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையிலான செயலமர்வுகள், கருத்தரங்குகள், குறுகிய கால பாடநெறிகள் என்பவற்றிற்காக விகிதாசார கொடுப்பனவுப் பத்திரத்தின் பிரகாரம் ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 6.25 வீதம் பிரயாணக் கொடுப்பனவாக கண்ணியமான கொடுப்பனவொன்றாக கொடுப்பனவைச் செய்யும் வகையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக 07 குறுங்கால பாடநெறிகளுக்காக இரண்டு விரிவுரையாளர்களுக்கு 14 சந்தர்ப்பங்களில் போக்குவரத்துச் செலவினமாக பாதீடு செய்யப்பட்ட பெறுமதியின் பிரகாரம் மொத்தம் 64,500 செலுத்தப்பட்டிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு.

### 2.1 நிதிசார் மீளாய்வு.

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்.

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாடுகளிலிருந்து மீண்டெழும் செயற்பாட்டு செலவிற்கான அரசாங்க மானியத்தை கருத்திற்கொள்வதற்கு முன்னர் ரூபா 5,639,112 மிகையை விளைவித்திருந்தது. மீண்டெழும் செலவிற்காக பெறப்பட்ட ரூபா 14,000,000 ஆன அரசாங்க மானியத்தினை காரணமாக இம்மிகை ரூபா 19,639,112 வரை அதிகரித்திருந்தது. அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள முன்னர் மிகை ரூபா 9,647,381 ஆனதுடன் மீண்டெழும் செலவிற்கான கிடைக்கப்பெற்ற ரூபா 9,800,000 தொகையான அரசாங்க மானியத்தைக் கணக்கிட்டதன் பின்னர் இம்மிகை ரூபா 19,447,381 வரை அதிகரித்திருந்தது.

2.2 செயற்பாட்டு மீளாய்வு.

2.2.1 செயலாற்றல்.

2004 ஆம் ஆண்டு முதல் 2010 வரை பதிவு செய்யப்பட்ட மாணவர்களில் 2011 மே 24 ஆம் திகதி வரையில் பட்டப்பின் படிப்பினை பூர்த்தி செய்யமுடியாத மாணவர்களின் எண்ணிக்கை பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 10% முதல் 76% இற்கு இடைப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | 2011 மே 24 ஆம் திகதி வரையில் பட்டப்பின் படிப்பினை பூர்த்தி செய்யாத மாணவர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| | | | % |
| 2004 | 277 | 27 | 10 |
| 2005 | 159 | 27 | 17 |
| 2006 | 385 | 149 | 39 |
| 2007 | 351 | 202 | 57 |
| 2008 | 330 | 251 | 76 |
| 2009 | 187 | * ஆய்வுக் கட்டுரை பூர்த்தி செய்யப் பட்டிருக்கவில்லை | |
| 2010 | 300 | * கற்கைநெறியின் விரிவுரைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை | |

2.2.2 நிதியத்தின் குறைப்பயன்பாடு.

21 வெளிவாரி ஆய்வுச் செயற்திட்டங்களுக்காக கிடைத்த மானியங்களில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் எஞ்சியிருக்கும் 2004 முதல் 2008 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,226,191 தொகை ஆராய்ச்சி மானியக் கணக்கில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

2.2.3 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயலாற்றுகைத் திட்டம்.

------------------------------------------------------------------------------------------

2010 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்றும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அத்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு அவசியமான வருடாந்த பாதீடு ஒன்றினத் தயாரிக்காமையால் அத்திட்டங்கள் பதிவேடுகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்தது.

2.2.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்.

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்ககள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 3.2.2(அ) பிரகாரம் பத்திரிகை விளம்பரம் ஒன்றின் மூலம் போட்டி விலைகளின் கீழ் நிறுவனத்திற்கு மிகவும் சாதகமான முறையில் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 6,482,745 பெறுமதியான 73 கணனிகள் கொள்வனவின் போது அதற்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தின் கணனி நிலையத்திற்காக 04 நேரடித் தொலைபேசிகள் வருடக் கணக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத போதிலும், அதற்காக ரூபா 58,707 தொகை செலவிடப்பட்டிருந்தது.

2.2.5 பதவியணியினர்.

--------------------------

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 9 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் மனித வளக் கட்டுப்பாடு தொடர்பாக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு.

---

கீழே காண்பிக்கப்பட்டுள்ளதன் படி மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கு இடையே கருத்திற்கொள்ளக் கூடிய விலகல் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது வினைத்திறனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

(i) 05 செலவின விடயங்களுக்குரிய ரூபா 13,670,000 ஆன மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய எவ்வித செலவினமும் மேற்கொள்ளாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 6 செலவின விடயங்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு 4% முதல் 264% வரையான எண்ணிக்கையால் மிகைத்து ரூபா 8,225,000 செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 07 செலவின விடயங்களுக்குரிய ரூபா 7,847,000 தொகை எஞ்சியிருந்ததுடன், அதன் சதவீதம் 15% முதல் 84% வரையாகும்.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கு வைப்பு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) செயலமர்வுகள் மற்றும் குறுகிய காலப்பாடநெறிகளை நடாத்துதல்
(இ) முற்பணக் கொடுப்பனவு
(ஈ) ஆவணங்களின் பராமரிப்பு
(உ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஊ) ஆராய்ச்சி செயன் முன்னேற்றம்